பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரைதான் திறந்திருக்கும்!

# டாஸ்மாக் கடைகள் செயல்படும் நேரத்தில் மாற்றம் இல்லை!

## அமைச்சர் முத்துசாமி திட்டவட்டம்!



சென்னை, ஜூலை 15 -

தற்போது உள்ளதுபோல பகல் 12 மணி முதல் இரவு 10 மணிவரைதான் டாஸ்மாக் கடைகள் செயல்படும் என்றும், அந்த நேரத்தை மாற்றும் எண்ணம் இல்லை என்றும் அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் முத்துசாமி நேற்று பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

டாஸ்மாக் கடைகளை வழக்கத்தைவிட முன் கூட்டியே திறப்பதற்கு கோரிக்கைகள் வந்துள்ளதாக கூறியிருந்தேன். இது சம்பந்தமாக நான் கூறிய கருத்தின் முழு பகுதியையும் கவனிக்காமல், அதிலுள்ள ஒரு சில பகுதியை மட்டும் கேட்டு சில அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன. நான் திட்டவட்டமாக சொல்வது என்னவென்றால், டாஸ்மாக் கடைகளுக்கான நேரத்தை மாற்றுவதற்கான எண்ணம் அரசுக்கு இல்லை. இப்போதுள்ளபடி பகல் 12 மணியில் இருந்து இரவு 10 மணிவரைதான் இயங்கும். அதில் மாற்றம் எதுவும் இல்லை.

டாஸ்மாக் மது விற்பனையில் உள்ள சில சிக்கல்களை ஒதுக்கித் தள்ள முடியவில்லை. மற்ற நேரத்தில் தவறான இடத்தில் மது வாங்குவதை தவிர்த்துவிட்டு, டாஸ்மாக் கடை திறந்திருக்கும் நேரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கடை நேரத்தை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்களுக்கு ஆலோசனை வழங்கி உள்ளோம்.

மது பாட்டில்களை வெளியே போட்டுச் செல்வது உள்பட பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பாக தொழிற்சங்கங்கள் உள்பட பல தரப்பினரும் பேசுகிறோம். அரசின் கொள்கைக்கு முரணானவற்றை ஒதுக்கிவிட்டு மற்ற கருத்துகள் பற்றி ஆய்வு செய்கிறோம். மற்ற மாநிலங்களுடனும் ஒப்பிட்டு பார்த்து வருகிறோம். ‘டெட்ரா பேக்’ குடுவைகளுக்கும் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

90 மி.லி. ‘மினி குவார்ட்டர்’ மது விற்பனை செய்தால், குறைவான பணம் வைத்திருப்பவரும் அதை வாங்கி அருந்த வாய்ப்பு ஏற்படுமே என்று கேட்டால், இதுசம்பந்தமாக அனைத்து தரப்பினரின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் முடிவு எடுக்க இருக்கிறோம். 90 மி.லி. அளவில் மதுவை விற்பனை செய்ய வேண்டும் என்பது அரசின் விருப்பம் அல்ல.

ஆனால் அளவுக்கு அதிகமாக (90 மி.லி.க்கு மேல்) சிலர் மது அருந்தும் தவறுகளும் நடக்கிறது. அந்த கோணத்தில் சிந்தித்தோம். ஆனால் அது வேறு விளைவுகளை ஏற்படுத்துவதான சூழ்நிலை வந்தால் அதை கைவிட்டுவிடுவோம்.

அங்கும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். இந்த பிரச்சினை கட்டுப்படுத்தப்படும். சமீபத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் சம்பந்தப்பட்டவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். டாஸ்மாக் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள். அவற்றை தீர்க்க தொழிற்சங்கங்களுடன் பேசி இருக்கிறோம். இதில் என்னென்ன நிவாரணம் செய்யப்படலாம் என்பது பற்றிய அறிவுரைகளை அதிகாரிகள் அளித்துள்ளனர். இன்னும் 10 நாட்களில் தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

### விழிப்புணர்வு

மதுவால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே டாஸ்மாக் கடையிலேயே ஏற்படுத்த இருக்கிறோம். கடையின் கண்காணிப்பாளருக்கும், விற்பனையாளருக்கும் இதுசம்பந்தமான சுற்றறிக்கை அளிக்கப்பட்டு உள்ளது.

### பில் தரப்படும்

டாஸ்மாக் கடைகளில் கண்காணிப்பு கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த கேமரா மூலம் சென்னையில் இருந்தபடியே அதிகாரிகள், கடையை கண்காணிக்கலாம். உள்ளூர் போலீசும் கண்காணிப்பார்கள்.கடையின் அளவு மிகச் சிறியதாக உள்ளது. இனி கடைகளை 500 சதுரஅடிக்கு மேலான இடங்களில் வைக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தென்காசி தொகுதியில் மறு வாக்கு எண்ணிக்கை:

# காங்கிரஸ் வேட்பாளர் பழனி நாடார் வெற்றி!



தென்காசி,ஜூலை.15-

கடந்த 2021ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது தென்காசி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க.வின் கூட்டணி கட்சியான காங்கிரஸ் வேட்பாளர் பழனி நாடார் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளரான செல்வ மோகன்தாஸ் பாண்டியனை விட 370 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், அறிவிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கைக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. எனவே தபால் வாக்குகளையும், மின்னணு எந்திரத்தில் பதிவான வாக்குகளில் 28 முதல் 30 சுற்றுகள் வரை பதிவான வாக்குகளை மறுஎண்ணிக்கை நடத்த வேண்டும் என ஐகோர்ட்டில் செல்வ மோகன்தாஸ் பாண்டியன் வழக்கு தொடர்ந்தார். அதனை விசாரித்த நீதிபதி, தபால் ஓட்டுக்களை மறுஎண்ணிக்கை நடத்த உத்தரவிட்டார்.

அதன்படி தென்காசி மாவட்ட ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் இன்று தபால் ஓட்டுகள் மீண்டும் எண்ணப்பட்டன. மறு வாக்கு எண்ணிக்கையின் முடிவில் பழனி நாடார் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பழனி நாடார் 1606 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் செல்வ மோகன் தாஸ் 673 வாக்குகளும் பெற்றுள்ளனர். அதிகாரப்பூர்வ அறிவிப்பானது, அறிக்கையாக தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

# கூட்டுறவு மொத்த பண்டக சாலைகள் தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டம்!

## டி.யு.சி.எஸ்.பத்மநாபன் அறிக்கை!

சென்னை, ஜூலை 15-

டி.யு.சி.எஸ். தொ.மு.ச. பொதுச் செயலாளர் டி.யு.சி.எஸ். பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ் நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு. ச.வின் அனைத்து பண்டகசாலைகள் நிர்வாகிகள் கூட்டம் தொ.மு.ச பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் (மாநிலங்களவை உறுப்பினர்) அவர்களின் அனுமதியோடு 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30மணியளவில் திருப்பத்தூர் மாவட்டம்,ஏலகிரி மலைதாயலூர் கிராமத் தில் உள்ள ஒ.எம்.சி.ஏ.கேம்ப் செண்டர் அரங்கில் மாநிலத்தலைவர் து.பிச்சை தலைமையில் மாநில பொருளாளர் இரா.பழனியப்பன்,மாநில துணைத் தலைவர் மரு.இரா.இராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் தொ.மு.ச பேரவையின் அலுவலக செயலாளரும், உழைப்பாளி ஆசியருமான ஆ.சீ. அருணகிரி, தொ.மு.ச. பேரவை செயலாளர் இரா. பொன்னுராம் ஆகியோர் ஆலோசனைவழங்கி பேசுகின்றனர். மாநிலத் துணைத் தலைவர் கே.மலர்க்கொடி நன்றி கூறுகிறார். தாங்கள் சங்க நிர்வாகிகளுடன் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு டி.யு.சி.எஸ். பதம்நாபன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கீழடியில் ரூ.25 லட்சத்தில் புறக்காவல்நிலையம்!

சிவகங்கை, ஜூலை 15-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா கீழடியில் தமிழக முதல்வர் அவர்களால் இரண்டு மாதங்களுக்கு முன்பாக கீழடி அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. இந்த அருங்காட்சியகத்திற்கு தினசரி தமிழ்நாடு முழுவதிலுமிருந்தும் , வெளி மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிட்ட வண்ணம் செல்கிறார்கள். 3000 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழர்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடுகள், கலாச்சாரங் களை விளக்கும் வகையில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. தினசரி பல்லாயிரக்கணக்கில் சுற்றுலா பயணிகள் வருவதால் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக அருங்காட்சியத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழக முதல்வரிடம் வைக்கப்பட்டது. முதல்வர் உத்திரவின் அடிப்படையில் நேற்று முன்தினம் 9ம்தேதி கீழடியில் ரூபாய் 25 லட்சம் செலவில் புதிதாக புறக்காவல் நிலையம் அமைவதற்கான பூமி பூஜை மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் செல்வராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை டி.எஸ்.பி கண்ணன் கீழடி ஊராட்சிமன்ற தலைவர் வெங்கடசுப்பிரமணியன் மற்றும் காவல் துறை, வருவாய் துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். அனைத்து வசதிகளுடன் இங்கு புறக்காவல் நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வராஜ் கூறினார்.

சின்னாளப்பட்டி பேரூராட்சிப் பகுதி 18வது வார்டில்

# தார்ச்சாலை, வடிகால், தெருவிளக்கு அமைத்திட ரூ.50 லட்சம் ஒதுக்கீடு!

## அமைச்சர் ஐ. பெரியசாமி அறிவிப்பு!

சின்னாளபட்டி, ஜூலை15-

சின்னாளப்பட்டி பேரூராட்சி பகுதியில் 18வது வார்டில் தார்சாலை, வடிகால், தெருவிளக்கு அமைத்துகொடுக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50லட்சம் ஒதுக்கீடு செய்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு 18வார்டு பொதுமக்கள் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான அவர்கள் சின்னாளப்பட்டியில் உள்ள 18 வார்டுகளுக்கு நேரில் சென்று பொதுமக்கள் மற்றும் நெசவாளர்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தும், வார்டுகளில் நடைபெற்ற நலத்திட்ட பணிகளையும் ஆய்வு செய்து வருகிறார். கடந்த 3 நாட்களுக்கு முன்பு 1,2,7,18,16 வார்டுகளில் ஆய்வு செய்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அந்த பகுதியில் உள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்ட போது அவர்கள் தங்களுக்கு முறையான வடிகால் வசதி, தார்சாலை, சிமெண்ட் சாலை வசதி வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று உடனடியாக 18வது வார்டு பகுதியில் நலத்திட்ட பணிகளை செய்ய ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.50லட்சம் ஒதுக்கீடு செய்தார். அதன் பின்னர் 7வது வார்டு பகுதிக்கு ரூ.27லட்சமும், செக்காபட்டி பகுதியில் புதிய கழிப்பறை கட்ட நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தங்களை நேரில் சந்தித்து தங்களின் குறைகளை கேட்டறிந்ததோடு அவற்றை நிவர்த்தி செய்யும் வண்ணம்சட்டமன்றதொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1கோடியே 20லட்சம் ஒதுக்கீடு செய்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு தி.மு.க. வார்டு உறுப்பினர்கள் சாந்தி, தாமரைச்செல்வி, ஹேமா, வேல்விழி, செல்வி, ராஜீ, சங்கரேஸ்வரி, மற்றும் ஊர் பொதுமக்கள் கைத்தறி நெசவாளர்கள் உட்பட பலரும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.



பரமக்குடியில் புதிய நூலக கட்டிடம் அமைக்க வேண்டும் என வாசகர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனையடுத்து பரமக்குடி கிருஷ்ணா தியேட்டரில் மாவட்ட மைய நூலக கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 70 லட்சத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. பரமக்குடி எம்.எல்.ஏ. முருகேசன் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, போகலூர் ஒன்றிய செயலாளர் குணசேகரன், ஒன்றிய துணைத் தலைவர் வழக்கறிஞர் பூமிநாதன், நயினார் கோவில் ஒன்றிய செயலாளர் சக்தி,பரமக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார்,மாவட்ட நூலக அலுவலர் செல்வ சுப்பிரமணியன், நூலக நித்தியானந்தம் மற்றும் பொதுப்பணி துறை உதவி செயற்பொறியாளர் அருணகிரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


